# THE LAST JUDGMENT.

(A Tract of 8 pages, is a description, taken from different parts of the word of God, of the solemnities of the last Judgment, and contains appropriate advice and instruction in reference to that awful day, it being the substance of No. 32, of the publications of the American Tract Society.)

# நியாயத்தீர்ப்பு.

சனங்களே, நமது முன்னோர்கள் எல்லாரும் எங்கே? இறந்துபோய்விட்டார்கள் அல்லவோ. இப்பொழுது இருக்கிற நாமும் அவர்களைப் போலத்தான் சிலகாலத்தில் இறந்துபோவோம். பின்பு நம்முடைய சரீரம் அழிந்துபோனாலும் ஆத்துமா அழிவதில்லை. அது இவ்வுலகத்திற் செய்த நன்மை தீமைப்படி சந்தோஷத்தை அல்லது அசந்தோஷத்தைப் பெற்று அனுபவித்துக்கொண்டிருக்கும். இற்றிலே இந்த உலகமும் முடிந்துபோம். இதின் கடைசிநாள் தானே, ஆதிநாள் முதல் அற்றைவரைக்குந் தோற்றப்படும். மனிதர் யாவரையும் நியாயத்தீர்ப்புப்பண்ணும் நாளாயிருக்கும்.

அந்நாளிலே கிறிஸ்துநாதர் தமது சருவவல்லமையோடும் மகிமையோடுந் தமது பரிசுத்தவாளர் சகலருடனேயும் வெளிப்படுவார். அப்பொழுது சிவசமயத்தாராலும் புத்த சமயத்தாராலுங் கிறிஸ்துமார்க்கத்தாராலும் மற்றெந்தச் சமயத்தாராலுஞ் சரி, உலகம்

2d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000
1844.

உண்டான நாள்முதற்கொண்டு அந்நாள்வரைக்
கும் மரித்துப்போனவர்கள் சகலரும் அழியாத
சரீரத்தோடே எழுந்திருப்பார்கள். அக்காலத்
தில் உயிரோடிருப்பவர்களுடைய மாமிசத்துக்
கு அடுத்த சரீரமும் ஆவிக்கு அடுத்த சரீரமாக
மாற்றப்படும். மரித்தவர்களும் மரியாமல் இரு
ப்பவர்களும் இப்படியே அழியாத சரீரத்தைப்
பெற்று நிற்பார்கள். இதற்குத் திட்டாந்தம் பி
ரேதக்குழிகளிலுள்ள யாவரும் அவருடைய ச
த்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழு
து நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்ப
டிக்குந் தீமைசெய்தவர்கள் ஆக்கினை அடையும்
படிக்கும் எழுந்து புறப்படுவார்கள் என்று எ
ழுதியிருக்கின்றது.

மேலும் இதைக் குறித்து மரித்தோர் எப்ப
டி எழுந்திருப்பார்கள். எப்படிக்கொத்த சரீ
ரத்துடனே வருவார்களென்கில் அதற்கு அத்
தாட்சி நீ விதைக்கிற தானியங் கெடாவிட்டாற்
புதிதான பயிர் தோன்றமாட்டாதே. மேலும்
நீ விதைக்கும்பொழுது இனிமேல் விளையும்
மேனியையும் விதையாமற் கோதும்பை அல்
லது மற்றொரு தானியத்தினுடைய வெறுமணி
யை விதைக்கிறாய். அதற்குப் பராபரன் தமது
சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்.
அந்தப்படி விதைவகைகள் யாவற்றிற்கும் அதற்
கதற்கேற்ற மேனியுண்டு. அப்படிப்போல மரி
த்தோர் உயிரோடெழும்புதலும் உண்டாயிருக்
கும். அழிவுள்ள சரீரம் விதைக்கப்பட்டுப் பி
ன்பு அழிவில்லாமையாய் எழுந்திருக்கும். கன
வீனமான சரீரம் விதைக்கப்பட்டுப் பின்பு மகி

மையாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ள சரீரம் விதைக்கப்பட்டுப் பின்பு பலமாய் எழுந்திருக்கும். மேலும் நான் உங்களுக்கு இரகசியத்தை அறிவிக்கிறேன் என்னவெனில் நாம் எல்லாரும் நித்திரை அடைந்து போவதில்லை. ஆகிலும் எல்லாருங் கடைசி எக்காளந் தொனிக்கும் பொழுது ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம். அன்றியும் அழிவுள்ளதாகிய இது அழியாமையையுஞ் சாவுக்கு உடந்தையாகிய இது சாவாமையையுந்தரித்துக்கொள்ளுமென்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே சகல ஆத்துமாவும் அழிவில்லாத சரீரத்தோடே வந்து கிறிஸ்துநாதருக்கு முன்பாக நிற்கும். அப்பொழுது அவர் தாம் மனிதருக்கு அருளிச்செய்த பழய புதிய ஏற்பாடென்னும் வேதப்பிரமாணத்தைக் கேட்டு அறிந்திருக்கிற ஒவ்வொரு ஆத்துமாவையும் அழைத்து அவர் அவர் குற்றவாளியோ சுத்தவாளியோவென்று எல்லாரும் அறியும்படி அவர் அவர் இவ்வுலகத்தில் இருக்கும்பொழுது மனம் வாக்குக் காயங்களினாலே செய்த செய்கைகளை விசாரித்து அவைகளுக்குத் தக்கதாய் நியாயந்தீர்ப்பார்.

மேற்சொல்லிய பிரமாணத்தை அறியாதவர்களோ தங்களுடைய மனதில் உண்டாகும் பகுத்தறிவினாலுந் தங்கள் சிந்தனைகளில் உண்டாயிருக்கும் நியாயப்பிரமாணத்தினாலும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இதற்கு உதாரணம், நியாயப்பிரமாணத்தை அடையாமல் எவர்கள் பாவஞ் செய்கிறார்களோ அவர்கள் நியாயப்பிரமாண

த்தின்படியே நியாயத்தீர்ப்பை அடையாமற் கெட்டுப்போவார்கள். நியாயப்பிரமாணமுள்ளவர்களாகிய எவர்கள் பாவஞ்செய்கிறார்களோ அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் என்று வேதஞ்சொல்லுகின்றது.

மேலும் எவ்வளவு தருமங்களைச்செய்தாலுந் தவசுபண்ணினாலுந் தீர்த்தமாடினாலும் பலிசெலுத்தினாலும் அதினாலே பாவ நிவாரணம் அடைவதில்லை. பராபரனுக்கு முன்பாகக் குற்றவாளிகளாய் நிற்பவர்களுடைய வாய் யாவும் அடைக்கப்படுமென்றும் உலகத்தார் யாவரும் பராபரனுக்கு முன்பாகக் குற்றவாளிகளாவார்கள் என்றும் எழுதியிருக்கின்றது. அப்பொழுது நீதிஇராசாவானவர் ஒரு மேய்ப்பன் ஆடுகளையுங் கடாக்களையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களையும் வெவ்வேறாகப் பிரித்து மறிகளுக்கு ஒப்பானவர்களைத் தமது வலது பக்கத்திலுங் கடாக்களுக்கு ஒப்பானவர்களைத் தமது இடப்பக்கத்திலும் நிறுத்தி வலது பக்கத்திலே நிற்பவர்களைப் பார்த்து நமது பிதாவினால் ஆசிர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்கென்று எத்தனம்பண்ணியிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ள வாருங்களென்றும் இடது பக்கத்தில் நிற்பவர்களை நோக்கிச் சபிக்கப்பட்டவர்களே, நம்மை விட்டு அகன்று பசாசுக்கும் அதின் தூதருக்குமென்றெத்தனம்பண்ணியிருக்கிற நித்திய அக்கினிக்குப் போங்கள் என்றுஞ் சொல்லுவார். இப்படியே இடப்பக்கத்தார் நித்திய

வேதனையை அனுபவிக்கும்படி நரகத்துக்கு
ம் வலப்பக்கத்தார் நித்திய வாழ்வை அடையு
ம்படி மோட்சத்துக்கும் போவார்கள்.

இதை வாசிக்கிறவர்களே, நீங்களும் உயர்கு
லத்தாராயிருந்தாலும் இழிகுலத்தாராயிருந்தா
லும் உங்கள் இருதயத்தைப் பரிசோதிக்கும்
பராபரனுக்கு முன்பாக இரகசியத்திலும் ப
ரகசியத்திலுஞ் செய்த செய்கைகளுக்குத் தக்
கதாக அந்நாளிலே நின்று நியாயந்தீர்க்கப்படு
வீர்கள். இந்தக்காரியங்களை நன்றாய்ச் சிந்தித்
துப்பாருங்கள். ஐயோ! பிதாக்கள் பிள்ளைகள்
முதலான யாவரும் ஓரிடத்திலே சேர்க்கப்பட்
ட பின்பு குணப்பட்ட பெற்றோர் குணப்படாத
பிள்ளைகளோடுங் குணப்பட்ட பிள்ளைகள் குண
ப்படாத பெற்றோரோடுஞ் சேராமற் பிரிக்கப்
பட்டு அவர் அவர் செய்கையின்படி மேற்சொ
ல்லிய இருபக்கத்துக்கும் போகவேண்டிவரும்.

பிரியமானவர்களே, நீங்கள் எல்லாரும் பெ
ற்றோர் பிள்ளைகளோடும் பிள்ளைகள் பெற்றோரோ
டுங் கணவன் மனைவியோடும் மனைவி கணவனோ
டும் இந்தக் காரியங்களைப் பேசி முன்சொல்லி
ய வலது புறத்திலே சேர்ந்திருப்பீர்களோ அ
ல்லது இடதுபுறத்திலே தான் சேர்ந்திருப்பீர்க
ளோ என்று யோசித்துப் பாருங்கள். மோ
சம் போகாதபடி இவைகளைக் கருத்தாய் உற்
றுப் பார்த்து நீதிஇராசா நியாயத்தலத்திலே
வீற்றிருந்து நியாயம் விசாரிக்கத் தொடங்கு
முன் மதியற்காரர் பயப்பட்டுத் தப்பிக்கொள்
ளவேண்டுமென்று அல்லும் பகலும் உண்டிஉ
றக்கம் இல்லாமற் தங்கள் தங்கள் சாட்சிக்கார

ரோடே தாங்கள் நியாயத்தலத்திலே நிற்கும் நாள் கிட்டி வர வர அதிகமாய் வியாகுலப்படு கிறது போல நீங்களும் முன்சொல்லிய நியாய த்தீர்ப்புநாள் அதி சீக்கரத்திலே வருகிறதென் பதைச் சிந்தித்து நீதிஇராசாவாகிய பராபரனு க்கு முன்பாக நின்று எப்படிப்பட்டவர்களா யித் தீர்க்கப்படுவீர்களென்று சற்றுந் தாமதமி ல்லாமல் ஆராய்ந்து தெளிந்துகொண்டு உங்க ள் இருதயங்களைச் சுத்தயாக்குங்கள்.

உங்களுக்கும் வேண்டிய மீட்பராயிருக்கிற கிறிஸ்து இயேசுவோ இன்னும் உங்களைப் புறக் கணியாமல் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தவர் களாகிய நீங்கள் எல்லாரும் நம்மிடத்தில் வாரு ங்கள். உங்களுக்கு ஆறுதல்செய்வோம். நீ ங்கள் கெட்டுப்போகாமற் பராபரனோடேஒப் புரவாகும்படிக்கு நம்மண்டை வந்துவிடுங்கள். நாம் உங்களுக்கு அனுக்கிரகஞ்செய்வோமென் றூர். ஆ! இப்பொழுது இவர் உங்களை அழை த்துப் புத்திசொல்லுகிறவராயிருக்கிறூர். கடை சியிலோ உங்களை நியாயந்தீர்ப்பவராய் வருவா ர். இவரை வேண்டாமென்று சொன்னீர்களே யாஞல் பின்னை ஆரண்டைக்குப் போவீர்கள். பாவிகளுங் குற்றவாளிகளுமாகிய உங்களை இர ட்சிக்கக் கூடியவர் யார்? ஐயோ! பிரமா விட் டுணு உருத்திரன் முதலான தேவர்கள் கூடிவ ந்தாலும் உங்களை இரட்சிக்கமாட்டார்கள். கி றிஸ்துநாதர் தமது ஆசனத்தின்மேல் வீற்றிரு க்கும்பொழுது பூமியும் வானமும் விலகி ஓ டிப் பூதியங்களோ எரிந்து கரைந்து மடமடப் போடொழிந்துபோம். ஆனபடியினுலே இவ

ரை உங்கள் இரட்சகராகக் கொண்டு இவர் அருளிச்செய்த சுவிசேஷமாயும் உங்கள் நியாயத்தீர்ப்புக்குப் பிரமாணமாயுமிருக்கிற சத்தியவேதத்தின்படி நடவுங்கள்.

தாமதியாமல் உங்கள் பாவங்களுக்காகத் துக்கப்பட்டு இவர்மேல் அன்புவைத்து உள்ளாகவும் புறம்பாகவும் இவரைப் பற்றிக்கொள்ளுங்கள். அப்படிச் செய்தீர்களானால் தமது வலப் புறத்திலே உங்களைச் சேர்த்துக் கரையேறப்பண்ணுவார். அல்லாவிட்டால் இடதுபுறத்திலே விட்டுச் சபிக்கப்பட்டவர்களாக நித்திய வேதனைக்குள்ளே தள்ளுவிப்பார். இக்காரியம் நிசமென்று அவர் அருளிச்செய்த வேதத்தினால் அறிவோம். எதினாலெனில் குமாரன்மேல் விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவனுண்டு. குமாரனை விசுவாசியாதவனோ சீவனைக் காண்பதில்லை. பராபரனுடைய கோபாக்கினை அவன்மேல் நிலைநிற்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

---

வேதவாக்கியங்கள்.

அறியாமையுள்ள காலங்களிலோ பராபரன் காணாதவர் போல இருந்தார். இப்பொழுதோ குணப்படவேண்டுமென்று எவ்விடத்திலும் உள்ள மனிதர் இயாவருக்குங் கட்டளையிடுகிறார். மேலும் ஒருநாளைக் குறித்தார். அதிலே அவர்தாம் நியமித்த ஒருவரைக்கொண்டு பூச்சக்கரத்திலுள்ள இயாவருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுப்பார். அவர் மரித்தோரிலிருந்து எழும்பினதினாலே அவர் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்.

நாம் எல்லாரும் அவன் அவன் தான் நடப்

பித்த நன்மைக்காகிலுந் தீமைக்காகிலுந் தக்கவைகளைச் சரீரத்திலே அடையும்படிக்குக் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டுமே.

அல்லாமலும் மரித்தோர் பராபரனுடைய குமாரன் சத்தத்தைக் கேட்குங் காலம் வருகின்றது. இப்பொழுதே அது வந்திருகின்றது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இதைக் குறித்து ஆச்சரியப்படாதிருங்கள். பிரேதக் குழிகளிலுள்ள யாவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது நன்மைசெய்தவர்கள் சீவனை அடையும்படிக்குந் தீமைசெய்தவர்களோ ஆக்கினை அடையும்படிக்கும் எழுந்து புறப்படுவார்கள்.

அல்லாமலும் பிதாவைக் கனம்பண்ணுகிறது போல எல்லாருங் குமாரனைக் கனம்பண்ணும்படிக்குப் பிதாவானவர் ஒருவருக்குந் நியாயத்தீர்ப்புக்கொடாமல் நியாயத்தீர்ப்பின் அதிகாரம் யாவையுங்குமாரனுக்கு ஒப்புக்கொடுத்தார். குமாரனைக் கனம்பண்ணாமலிருக்கிறவன் அவரை அனுப்பின பிதாவைக் கனம்பண்ணாமலிருக்கிறான்.

பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து சகலத்தையும் அவருக்கு ஒப்புக்கொடுத்தார். குமாரனில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய சீவனையுடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ சீவனைக் காண்பதில்லை. பராபரனுடைய கோபாக்கினையே அவன்மேல் நிலைநிற்கும்.